1978 செப்டம்பர் 7]

திரு. க. சுப்பு : குடியரசுத் தலைவர் ஆட்சியின் போது அவர் எக்சிகூடிவ் ஹெட், அதனால் அவர் நியமிக்கப்பட்டார். ஆனால் இப்போது அவர் கான்ஸ்டூஷனல் ஹெட். அவரை மாற்றியிருக்க வேண்டாமா. இப்போது கவர்னர் இருக்க முடியாது. முதலமைச்சர்தான் இருக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : The Minister has not finished his reply.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, தற்போது ஆளுநர் அவர்கள் தலைவராகவும், முதலமைச்சர் அவர்கள் துணைத் தலைவராகவும் இருக்கிறார்கள்.

திரு. க. சுப்பு : சட்ட ரீதியான விளக்கத்தை நான் கேட்க விரும்புகிறேன். ஆளுநர் ஆட்சியின் போது அவர் தலைவராக இருந்திருக்கலாம். ஆட்சேபணை இல்லை. அப்போது அவர் நிர்வாகத் தலைவர். ஆனால் இப்போது முதலமைச்சர்தான் இருக்க வேண்டும். ஆளுநர் இருப்பது ஏன்? குதிரைக்குக் குர்ரம் என்றால் ஆனைக்கு அர்ரம் என்று சொல்வதா? எந்த விதியின் கீழ் ஆளுநர் நியமிக்கப்பட்டார் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இது பற்றி தனியாக கேள்வி போடுவார்களானால் விரிவான பதிலைத் தர தயாராக இருக்கிறேன்.

பாலிஸ்டர்—கதர் துணி.

* வினா 80—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கைத்தறி—பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பாலிஸ்டரும் கதரையும் சேர்த்து பாலிஸ்டர் கதர் தயாரிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : (அ) மற்றும் (ஆ) : ஆம். பாலிஸ்டர் மற்றும் அதைப் போன்ற செயற்கை தும்புகளுடன் பஞ்சினையும் கலந்து, நூல் உற்பத்தி செய்து அதனை துணிகளாக பரீட்சார்த்த முறையில் நெய்து பார்த்ததில், இத் திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தமுடியும் என கருதப் படுகிறது. ஆனால் மேற்கொண்டு வேலை தொடருமுன், கதர் பற்றிய விளக்கத்தை தகுந்தவாறு மாற்றுவதற்காக சம்பந்தப் பட்ட மாநில மற்றும் மத்திய சட்டங்களைத் திருத்தவேண்டி யிருக்கிறது. இது மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

[முற்பகல் 9-50]

திரு. மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, பாலிஸ்டர், கதர், செயற்கை பாலிஸ்டர் கதர் என்றும் மாற்றம் ஏற்படு கிறபோது, அதனால் விலையேற்றம் ஏற்பட்டு ஏழை எளிய மக்கள்

[1978 செப்டம்பர் 7

வாங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டால், மீண்டும் அதிக மாக பாலிஸ்டர் கதர் தேங்கக் கூடும். ஆகவே, பாலிஸ்டர் கதர் விலை எந்த அளவிற்கு அரசு நிர்ணயித்து இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: பேரவைத் தலைவரவர்களே, இவ்விதம் உற்பத்தி செய்யப்பட்ட துணிகள் பார்வைக்கு கதரைப் போன்றும் அதே நேரத்தில் பாலிஸ்டர் துணிகளுக்குள்ள அனைத்துச் சிறப்புகளும் கொண்டவையாக வனப்புடன் உள்ளன. இவைகளின் விலைகளும் (மீட்டருக்கு ரூ. 6.95 முதல் ரூ.22.90 வரை) பொதுச் சந்தையில் விற்கப்படும் மில்களில் தயாரிக்கப்படும் பாலிஸ்டர் துணிகளின் விலைகளை விட குறைவாகவும் இருக்கிறது. கதருக்கு வழங்கப்படும் தள்ளுபடிகள் இவற்றுக்கும் வழங்கப்படும்பொழுது வெற்றிகரமாக இவைகளை விற்பனை செய்திட முடியும் என்ற நம்பிக்கை அரசுக்கு இருக்கிறது.

திரு. ரா. உமாநாத்: பேரவைத் தலைவரவர்களே, கதர் இயக்கம் ஆரம்பித்த போது அதனுடைய பொதுவான நோக்கமே நூலும் கையாலே நூற்கப்படவேண்டும், அதைக்கொண்டு கிராம வாசிகள் வீவும் செய்யவேண்டும் என்பது பிரதானமாக இருந்தது. இப்படி பரவலாக மில்லால் தயாரிக்கப்படும் நூலை வைத்து துணிகள் லினன் உற்பத்தி செய்தால், அந்தக் கதரின் பிரதான லட்சியத்திற்கு வேட்டு வைக்கும் முறையில் இந்த பாலிஸ்டர் கதர் இருக்காதா, அது கதர் திட்டத்திற்கு மாறாக இருக்காதா ஏன் இதை அரசாங்கம் செயல்படுத்துகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: பேரவைத் தலைவரவர்களே, செயற்கைத் தும்புகளான பாலிஸ்டர், விஸ் கோஸ், அக்ரிலிக்னையார் மற்றும் ஜெய்லன் ஆகியவைகளைத் தனித் தனியாகவும், கூட்டாகவும் பருத்தியுடன் பல விகிதாசாரங்களில் கலந்து கையினால் நூல் உற்பத்தி செய்து அந்நூலைக் கொண்டு கையினாலேயே செய்து கதர் பாலிஸ்டர் துணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. க. சு. தண்டபாணி: பேரவைத் தலைவரவர்களே, நான் வயதில் சிறியவன் என்ற காரணத்தால் பெரியவருக்கு நீங்கள் முதலில் வாய்ப்புக் கொடுத்து விட்டீர்கள். அவர் என் கேள்வியைக் கேட்டு விட்டார். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :- ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (* இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]